அதிசய வார நடவடிக்கை

பாலர் பள்ளி முதலாம் ஆண்டு

‘கேக்’



**கண்ணோட்டம்:**

அதிசய வாரம் என்பது பிள்ளைகள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தாமே தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பையொட்டி ஆழமாக அறிந்துகொள்ளும் ஒரு திட்டப்பணியாகும். அதிசய வாரத்தின்போது நடத்தப்படும் நடவடிக்கைகள் பிள்ளைகள் தங்களுக்கு எழும் வினாக்களுக்கு விடை கண்டறியவும், தெரிவுகளைச் செய்யவும், சுயமாக முடிவுகளை எடுக்கவும் வாய்ப்பு அளிக்கின்றன.

இந்நடவடிக்கை, பிள்ளைகள் கேக் வகைகள், அவற்றைச் செய்யும் முறை, சுவை போன்ற தகவல்களை ஆராய்ந்து அறிந்துகொள்ள உதவுகிறது.

**<u>கற்றல் குறிக்கோள்கள்:</u>**

**<u>கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் விரும்புதல்**
    - புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல் (ஏ-டு: புத்தகத்திலுள்ள படங்களைச் சுட்டிக்காட்டிப் பார்த்தல், கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது கேள்விகள் கேட்டல்)
    - தாய்மொழியில் நடத்தப்பட்ட கற்றல் அனுபவங்களைப்பற்றிப் பேசுதல்
    - எண்ணங்களையும் தகவல்களையும் தாய்மொழியில் வெளிப்படுத்த அடையாளம் அல்லது குறியீடுகள் வரைதல், உருவாக்குதல்

**<u>கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்</u>**

- பேசும்போது எதிரில் இருப்பவரோடு கண் தொடர்புகொள்ளுதல்
- ஒன்று அல்லது இரண்டு படிநிலைகளைக்கொண்ட கட்டளைகளைக் கேட்டுச் செயற்படுதல்

**இந்நடவடிக்கையில் ஈடுபடும்போது பிள்ளைகள்,**

- சக மாணவர்களின் ஒத்துழைப்பையும் ஆசிரியரின் ஆலோசனையையும் பெறுகிறார்கள்.
- சுயமுனைப்பு, ஆராய்தல், பிரச்சனைக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றின்வழி மகிழ்ச்சியான சுய கற்றல் அனுபவத்தைப் பெறுகிறார்கள்.
- தங்களின் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்கிறார்கள்.

**1. நான் தெரிந்துகொள்ள விரும்புவது...**

1.1 ஆசிரியர் பிள்ளைகளுடன் பிறந்தநாள் கொண்டாட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடினார். பிறகு, பிள்ளைகள் பிறந்தநாள் கேக் படம் ஒன்றை வரைந்தார்கள்.



1.2 பிள்ளைகள் வாக்கெடுப்பின் வாயிலாக அதிசய வாரத் திட்டப்பணிக்கு ‘இன்பமான பிறந்தநாள்’ என்னும் புத்தகத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.









ஆசிரியர் பெரிய புத்தகத்தில் உள்ள கதையைப்பற்றிப் பிள்ளைகளோடு கலந்துரையாடினார்.

1.3 பிள்ளைகள் பின்வரும் வினாக்களை எழுப்பி அதற்கான விடைகளைக் கண்டறிய விரும்பினார்கள்.

- வேறு என்னென்ன தினங்களில் கேக் வாங்கிக் கொண்டாடலாம்?
- கேக் எப்படிச் செய்வார்கள்?
- கேக் செய்ய என்னென்ன பொருள்கள் வேண்டும்?
- பிறந்தநாள் கொண்டாட்டத்தில் என்னென்ன விளையாட்டுகள் விளையாடலாம்?

**சிந்தனை வரைபடத்தில் பதிவு செய்தல்**

1.4 ஆசிரியர் கேக்கைப்பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடினார். பிறகு, ஆசிரியர் பிள்ளைகள் ஏற்கனவே அறிந்து வைத்திருக்கும் தகவல்களைச் சிந்தனை வரைபடத்தில் பதிவு செய்தார்.




பிள்ளைகள் கூறிய கருத்துகளை ஆசிரியர் சிந்தனை வரைபடத்தில் பதிவு செய்தல்

1.5 பிள்ளைகள் வண்ணத்தாள்கள், காகிதத் தட்டு ஆகியவற்றால் கேக்கைச் செய்து பார்த்தார்கள்.









பிள்ளைகள் வண்ணத்தாள்களால் செய்த கேக்

## 2. நான் கண்டுபிடித்தவை...

2.1 பெற்றோர்கள் இருவரும் வகுப்புக்கு வந்தார்கள். அவர்கள் பிள்ளைகளுக்குக் கேக் செய்து காட்டினார்கள்.






பெற்றோர் பிள்ளைகளுடன் கேக் செய்தல்.

2.2 பிள்ளைகள் கேக்கைப்பற்றி அறிய விரும்பும் தகவல்களைப் பெற்றோர்களிடம் கேட்டறிந்துகொண்டார்கள்.

2.3 பிள்ளைகள் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் விளையாடும் விளையாட்டுகளை விளையாடினார்கள்.





**3. நான் தெரிந்துகொண்டவை...**

3.1 பிள்ளைகள் பெற்றோர்களுடன் கேக் செய்யும் முறையைப்பற்றி அறிந்துகொண்டார்கள்.





3.2 பிள்ளைகள் வேறு சில கொண்டாட்டங்களுக்கும் கேக் வாங்கிக் கொண்டாடலாம் என அறிந்துகொண்டார்கள்.

அன்னையர் தினம்




கல்யாண நாள்



3.3 பிள்ளைகள் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் விளையாடும் விளையாட்டுகளைப்பற்றி அறிந்துகொண்டார்கள்.

*********************************************************************

**Contributed by:** Yasmin Mohd Yusoff | MOE Kindergarten @ West Spring